# தொல்காப்பிய விழாப் போட்டிகள் - 2023

## பொது அறிவுப் போட்டி (வினா-விடை): பிரிவு - 5 (2014-இல் பிறந்தோர்)

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களில், கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.**

1. தமிழ் எழுத்துக்களின் வகைகள் எவை?
   1. உயிர் எழுத்து 2. மெய் எழுத்து 3. உயிர்மெய் எழுத்து 4. ஆய்த எழுத்து

2. தமிழ் மொழியில் எத்தனை உயிர் எழுத்துக்கள் உள்ளன?
   பன்னிரண்டு (12)

3. தமிழில் உள்ள முதல் எழுத்துக்கள் எவை?
   உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள்

4. தமிழ் மொழியில் எத்தனை முதல் எழுத்துக்கள் உள்ளன?
   முப்பது (30)

5. தமிழ் மொழியில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?
   இருநூற்று நாற்பத்தேழு (247)

6. தமிழ் மொழியில் எத்தனை உயிர்மெய் எழுத்துக்கள் உள்ளன?
   இருநூற்றிப் பதினாறு (216)

7. வல்லின மெய்யெழுத்துக்கள் எவை?
   க், ச், ட், த், ப், ற்

8. இடையின மெய்யெழுத்துக்கள் எவை?
   ய், ர், ல், வ், ழ் ள்

9. மெல்லின மெய்யெழுத்துக்கள் எவை?
   ங், ஞ், ண், ந், ம், ன்

10. எத்தனை வல்லின உயிர்மெய் எழுத்துக்கள் உள்ளன?
    எழுபத்திரண்டு (72)

11. இயல், இசை, நாடகம் என்பவற்றை எவ்வாறு அழைப்பார்கள்?
    முத்தமிழ்

12. பண்டைய தமிழ் இலக்கண நூல் எது?
    தொல்காப்பியம்

13. தொல்காப்பியத்தை எழுதியவர் யார்?
    தொல்காப்பியர்

14. தொல்காப்பியத்தில் உள்ள மூன்று அதிகாரங்களும் எவை?
எழுத்து, சொல், பொருள்

15. திருக்குறளை இயற்றியவர் யார்?
திருவள்ளுவர்

16. திருக்குறளின் முப்பெரும் பிரிவுகளும் எவை?
அறம், பொருள், இன்பம்

17. ஔவையாரை எவ்விதம் அழைக்கின்றார்கள்?
தமிழ் மூதாட்டி

18. ஔவையார் எழுதிய நூல்களில் ஒன்றன் பெயரைத் தருக?
ஆத்திசூடி, மூதுரை, கொன்றை வேந்தன், நல்வழி.

19. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றைக் கூறுக?
சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி

20. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
இளங்கோவடிகள்

21. யாழ் நூலை எழுதியவர் யார்?
சுவாமி விபுலாநந்தர்

22. ஆறுமுகநாவலர் எழுதிய பாடநூல்களுள் ஒன்றைக் கூறுக?
பாலபாடம், பாலபோதினி

23. 'ஓடி விளையாடு பாப்பா...' என்ற பாடலைப் பாடியவர் யார்?
சுப்பிரமணிய பாரதியார்

24. மூவேந்தர் என அழைக்கப்படுவோர் யாவர்?
சேரர், சோழர், பாண்டியர்

25. வன்னியை ஆண்ட இறுதி மன்னனின் பெயர் யாது?
பண்டாரவன்னியன்

26. யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னனின் பெயர் யாது?
சங்கிலியன்

27. விருப்பு என்பதற்கான எதிர்ச் சொல் எது?
வெறுப்பு

28. அன்பு என்பதற்கு ஒத்த சொல் ஒன்றைத் தருக?
காதல், பாசம், நேசம்

29. தலைவன் என்பதற்கான பெண்பாற் பெயர் எது?
தலைவி

30. ஐம்பொறிகள் எவை?
1. மெய் 2. வாய், 3. கண், 4. மூக்கு, 5. செவி

31. காராளர் அல்லது ஏராளர் என அழைக்கப்படுபவர் யார்?
உழவர்

32. தமிழரின் தற்காப்பு விளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக
சிலம்பாட்டம், களரி

33. சூடிக்கொடுத்த நாச்சியார் என அழைக்கப்படுபவர் யார்?
ஆண்டாள்

34. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
மறைமலை அடிகள்

35. Fever என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
காய்ச்சல்

36. Cancer என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
புற்றுநோய்

37. Allergy என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
ஒவ்வாமை

38. Diabetes என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
நீரிழிவு

39. Bus என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
பேருந்து

40. Radio என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
வானொலிப் பெட்டி

41. Telephone என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
தொலைபேசி

42. Television (TV) என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
தொலைக்காட்சி

43. Computer என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
கணினி

44. Internet என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையம்

45. Website என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையத்தளம்

- மேலே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மேலதிகமாகவும் தேர்வின் போது வினாக்கள் கேட்கப்படும்.
- போட்டியாளர்களின் தரவரிசையை (1ம், 2ம், 3ம் இடங்களை) நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்படின் அம்மேலதிக வினாக்களின் புள்ளிகள் கருத்திற் கொள்ளப்படும்.